# SRES - NFIR

## கேபினேட் செயலாளர் தலைமையில் 13.04.19 அன்று நடைபெற்ற 47வது நேஷனல் கவுன்சில் – JCM கூட்டத்தின் முடிவுகள்

கேபினேட் செயலாளர் திரு. **P.K.சின்கா** தலைமையில் நடைபெற்ற **NC - JCM** கூட்டத்தில் **JCM Staff Side** தலைவர் **Dr.M. இராகவைய்யாஜி** அவர்கள் துவக்க உரையாற்றும் போது கீழ்கண்ட முக்கிய கோரிக்கைகளை உடனே நிறைவேற்ற வலியுறுத்தியுள்ளார். இக்கூட்டத்தில் திரு.**P.S.சூரியபிரகாசம், GS/SRES & JGS/NFIR** அவர்கள் வலியுறுத்தியுள்ளார்.

- **JCM** கூட்டங்களை தொடர்ந்து நடத்தி கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டும்.
- அக்ராய்டு பார்முலாபடி 7வது ஊதியக்குழு சரியான சம்பள நிர்ணயம் செய்யாததை அரசிடம் சுட்டிக்காட்டி பிட்மெண்ட் பார்முலா 3.7 மடங்காக உயர்த்த வேண்டும்.
- **NPS**ஐ ரத்து செய்ய அமைக்கப்பட்ட கமிட்டி மூலம் பயன் ஏதுமில்லாததை கேபினேட் செயலாளரிடம் சுட்டிக்காட்டி **NPS**ஐ உடனே ரத்து செய்து கடைசி மாத சம்பளத்தில் **50%** சம்பளத்தை பென்ஷனாக கிடைக்க செய்ய வேண்டும்.
- தனியார் மயம் / அவுட்கோர்ஸிங் மற்றும் முன்னறிவிப்பு ஏதுமின்றி இருக்கின்ற வேலைகளை தாரைவார்ப்பதை ரத்து செய்ய வேண்டும்.
- 7வது ஊதியக்குழுவின் பரிந்துரையை விருப்பப்படுகின்ற மாற்று தேதியில் அமுல்படுத்துவதற்கு காலக்கெடு ஏதும் விதிக்காமல் மீண்டும் ஆப்ஷன் கொடுத்து பே பிக்ஸேஷன் செய்து கொள்வதற்கு வழிவகை செய்ய வேண்டும்.
- நிதி அமைச்சகத்திடம் நிலுவையில் உள்ள **OTA /** டிரஸ்ஸர்களுக்கு ஆரம்ப நிலை சம்பளமாக **GP** ரூ.2000/– வழங்க வேண்டும்.
- நிதி அமைச்சகத்திடம் தேக்கத்தில் உள்ள **SSO** களுக்கு **GP** ரூ. 5400/– வழங்கவேண்டும்.
- **CMT**ல் உள்ள **CMA** களுக்கு **GP 4600/-** ம், **CMS**களுக்கு ரூ.5400/–ம் வழங்க வேண்டும்.
- **SSE, SMR, Ch.OS** மற்றும் இதர சூப்பர்வைஸர் கேட்டகரிகளுக்கு நிதி அமைச்சகத்திடம் நிலுவையில் உள்ள **GP** ரூ.4800/– உடனே வழங்கவேண்டும்.
- 7வது ஊதியக்குழு சம்பளத்திற்கேற்ப **NDA**வை உயர்த்தி வழங்க வேண்டும்.

**இதர கோரிக்கைகள்**

- போர்டு ஆப் ஆர்பிட்டிரேஷன் அவார்டுகளை கூட அமுல்படுத்தாமல் காலந்கடத்தி தொழிலாளர்களிடையே கொந்தளிப்பை உருவாகியதை சுட்டிக்காட்டியபோது இதுகுறித்து கலந்து பேசி முடிவெடுக்க கேபினேட் செயலாளர் ஒப்புதல்.
- 300 நாட்களுக்கு மேலாக **LAP** லீவை சேர்த்து வைக்க வலியுறுத்தியபோது **DOPT** யை மீண்டும் பரிசீலனை செய்ய ஒப்புதல்.
- **Ex.**சர்வீஸ் மேன்களின் சம்பளத்தை ரீ பிக்ஸேஷன் செய்வதற்கு **DOPT** உடன் தனிகூட்டம் நடத்திட இசைவு.
- ரன்னிங் ஸ்டாப்களுக்கு **KMA** உயர்த்தி வழங்க இரயில்வே அமைச்சரால் நிதி அமைச்சகத்துக்கு பரிந்துரைத்தும் நிறைவேற்றப்படவில்லை. கேபினேட் செயலாளர் உரிய நடவடிக்கை எடுக்க ஒப்புதல்.
- **KMA**க்கான **70%**ஐ வருமானவரியிலிருந்து விலக்கு அளிப்பது குறித்து நடவடிக்கை எடுப்பதாக கேபினேட் செயலாளர் உறுதி.
- **MACPS**ல் உள்ள பல்வேறு அனாமலிகள் குறித்தும், **Very Good** என்ற பெஞ்ச் மார்க் அடிப்படையில் இரயில்வே பள்ளிகளில் உள்ள ஆசிரியர்களுக்கு **MACPS** மூலம் அப்கிரேடேஷன் மறுக்கப்படுவதை எடுத்துக்கூறியதற்கு உரிய நடவடிக்கை எடுப்பதாக கேபினேட் செயலாளர் உறுதி.

மேலும் பல்வேறு பிரச்சினைகளை சுட்டிக்காட்டி உடனே நிவர்த்தி செய்ய தேசிய தலைவர் **Dr.M. இராகவைய்யாஜி** அவர்கள் **கேபினேட் செயலாளரிடம்** வலியுறுத்தியுள்ளார்.

**அறிக்கை எண் 967** | **16.04.19**

**P.S.சூரியபிரகாசம்**
**GS / SRES & JGS/NFIR**